நாணயச் சபை

இலங்கை மத்திய வங்கி

2021 சனவரி 19 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் | 2021இன் 01ஆம் இலக்கம்

---

## உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, கொவிட்-19 நோய்த்தொற்று காரணமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பிடப்படும்) திரவத்தன்மை மீதும் ஏனைய முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகள் மீதும் ஏற்படக்கூடிய மோசமான தாக்கத்தினையும் உரிமம்பெற்ற வங்கிகளின் திரவத்தன்மை மற்றும் மூலதன தாங்கிருப்பினையும் பொருத்தமான மட்டங்களில் பேணுவதன் முக்கியத்துவத்தினையும் கருத்திற் கொண்டு, உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகளைக் கட்டுப்படுத்துவதன் மீது இப்பணிப்புரைகளை இத்தால் விடுக்கிறது.

**1. அதிகாரமளித்தல்**

1.1 திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76ஜே(1) இன் நியதிகளில், வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, நாணயச் சபைக்கு, அத்தகைய வங்கிக்கு, வங்கிகளுக்கு எந்தவொரு வியாபார அம்சங்கள் தொடர்பிலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பது பற்றி அனைத்து அல்லது ஏதேனும் உரிமம்பெற்ற வங்கிக்கு பணிப்புரைகளை விடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

**2. பிரயோகத்தின் செயற்பரப்பு**

2.1 இப்பணிப்புரைகள், இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கிக்கும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள வங்கியொன்றின் கிளைக்கும் தனியான அடிப்படையில் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

**3. தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள்**

3.1 இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் காசிலான பங்குலாபக் கொடுப்பனவுகளை 2020ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள் இறுதியாக்கப்பட்டு, அது வெளிவாரி கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படும் வரை பிற்போடுதல் வேண்டும்.

3.2 இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியும் 2019 மற்றும் 2020ஆம் ஆண்டிற்காக ஏற்கனவே பிரகடனப்படுத்தப்படாத இலாபங்களை தாய்நாட்டிற்கு அனுப்புவதனை, 2020ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள் இறுதிப்படுத்தப்பட்டு, அது வெளிவாரிக் கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படும் வரை பிற்போடுதல் வேண்டும்.

3.3 காசிலான பங்கிலாபக் கொடுப்பனவுகளையும் இலாபங்களை தாய்நாட்டிற்கு அனுப்புவதனையும் தீர்மானிக்கும் பொழுது உரிமம்பெற்ற வங்கிகள், பாசல் III இன் கீழ் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் தேவைப்பாடுகள் மீதும், எதிர்பார்க்கப்படும் சொத்து வளர்ச்சி, வியாபார விரிவாக்கம் மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கம் என்பன தொடர்பில் உரிய கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

3.4 உரிமம்பெற்ற வங்கிகள் 2021 யூன் 30ஆம் நாள் வரை;

(அ) அதன் சொந்தப் பங்குகளை மீண்டும் வாங்குவதிலிருந்தும் விலகியிருத்தல் வேண்டும்;

(ஆ) முகாமைத்துவப் படிகளிலும் பணிப்பாளர் சபைக்கான கொடுப்பனவுகளிலும் அதிகரிப்புக்களைச் செய்யாது விலகியிருத்தல் வேண்டும்;

(இ) முன்மதியுடைய விதத்தில் நடந்து கொள்ளல் வேண்டும் என்பதுடன் விளம்பரங்கள், வியாபார ஊக்குவிப்புக்காக பரிசுத் திட்டங்கள், பொழுதுபோக்கு, அநுசரணைகள், பயணம் மற்றும் பயிற்சி போன்ற அத்தியாவசியமல்லாத செலவினங்களை ஏற்படுத்துவதிலிருந்தும் சாத்தியமானளவிற்கு விலகியிருத்தல்; அத்துடன்

(ஈ) ஏதேனும், மூலதனச் செலவினங்கள் உறப்படும் போது தீவிரமான உரிய விழிப்புக் கவனத்தினையும் முன்மதியுடைய தன்மையினையும் பின்பற்றுதல் வேண்டும்.

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**
நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்